#everyworkermatters

MODEL GAJI PROGRESIF

BAGI INDUSTRI PEMBERSIHAN


துப்புரவுத் துறைக்கான படிப்படியாக உயரும் சம்பள முறை







EMPAT TANGGA
MODEL GAJI PROGRESIF (PWM)
படிப்படியாக உயரும் சம்பள முறை (PWM) - யின் நான்கு ஏணிகள்



- Bagi semua pekerja pembersihan sepenuh masa (Rakyat Singapura / Penduduk Tetap)
- Pekerja pembersihan sambilan harus dibayar mengikut kadar gaji PWM yang pro-rata

- எல்லாத் துப்புரவாளர்களுக்கும் பொருந்தும் (சிங்கப்பூர் குடிமகன்(ள்) / நிரந்தரவாசிகள்).
- பகுதிநேரத் துப்புரவாளர்களுக்கு PWM சம்பளம் விகிதாசார அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டும்.

ADA SOALAN? SILA HUBUNGI:
ஏதாவது கேள்விகள்? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்:

NTUC U Care Centre
1800 255 2828 (Mon – Fri: 9am – 6pm)
ucarecentre@ntuc.org.sg
www.facebook.com/ucarecentre
www.ntuc.org.sg/ucarecentre

Building Construction and Timber Industries Employees' Union
6220 1233
batu@ntuc.org.sg
www.facebook.com/batuconnect

BONUS PWM
PWM போனஸ்

Pada Januari 2020, semua pekerja pembersihan yang layak akan dapat Bonus PWM tidak kurang daripada gaji 2 minggu mengikut gaji asas bulanan.

Pekerja pembersihan mesti bekerja untuk majikan yang sama sekurang-kurangnya 12 bulan pada tarikh pengiraan Bonus PWM.

Bonus PWM harus dibayar sekurang-kurangnya setahun sekali dan tidak lebih dari dua kali setahun

Pekerja pembersihan yang sendiri meletak jawatan atau dipecat kerana salah laku tidak layak untuk Bonus PWM.

ஜலனவரி 2020 முதல், தகுதி பெறும் எல்லாத் துப்புரவாளர்களும் அடிப்படைச் சம்பளத்தில் 2 வாரங்களுக்குக் குறையாமல் PWM போனசைப் பெறுவர்.

PWM போனஸ் கணக்கிடப்படும்போது, துப்புரவாளர் ஒரே முதலாளிக்குக் குறைந்தது 12 மாதங்களாவது வேலை செய்திருக்கவேண்டும்.

படிபடியாக உயரும் ஊதிய முறையின் வழி ஆண்டிற்கு ஒரு முறையும் அல்லது இரண்டு முறைக்கு மேற்படாமலும் போனஸ் கொடுக்கப்பட வேண்டும்.

துப்புரவாளர், தன் சொந்த விருப்பத்தின் பேரில் இராஜினாமா செய்யும் போதோ அல்லது தவறான நடத்தையின் காரணமாக பணி நீக்கம் செய்யப்படும் போது PWM போனஸ் பெறத் தகுதிபெற மாட்டார்.

TANGGA KEMAHIRAN PWM DIPERTINGKATKAN
மேம்படுத்தப்பட்ட PWM திறன்கள் ஏணி

Bermula dari tahun 2022, semua pekerja pembersihan harus dilatih dalam Satu Modul Wajib Keselamatan dan Kesihatan Pekerjaan dah Satu Modul Teras.
Untuk senarai modul yang penuh, sila rujuk ke laporan penuh.

2022 முதல், எல்லா துப்புரவாளர்களும் ஒரு கட்டாய வேலையிட பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடப் பயிற்சித் தொகுப்பு மற்றும் ஒரு பிரதான பாடப் பயிற்சித்தொகுப்புப் பயிற்சி பெற வேண்டும்.
கிடைக்கக்கூடிய பாடப் பயிற்சித்தொகுப்புப் பட்டியலுக்கு, முழு அறிக்கையைப் பார்க்கவும்.



Untuk laporan yang penuh, sila imbas Kod QR ataupun melawat:
முழு அறிக்கையைப் படிக்க, QR கோட்டை வருடுங்கள் அல்லது பின்வரும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்:
www.ntuc.org.sg/TripartiteClusterforCleaners
Informasi tepat pada Mac 2020
மார்ச் 2020-ல் உள்ள சரியான தகவல்படி



PEJABAT DAN KOMERSIAL
அலுவலகமும் வர்த்தகமும்

Contoh: Klinik, Kondominium, Sekolah, Rumah Sakit, Pusat Membeli-belah
எ.கா. மருந்தகங்கள், கூட்டுரிமை வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள், கடைத்தொகுதிகள்

Gaji-gaji yang tertera adalah Gaji Asas Bulanan அடிப்படை மாத சம்பளத்தைக் குறிப்பிடுகிறது	**1/7/2020 - 30/6/2021**	**1/7/2021 - 30/6/2022**	**1/7/2022 - 30/6/2023**
Penyelia மேற்பார்வையாளர்கள	≥ $1,854	≥ $1,910	≥ $1,967
Pekerja Pembersihan Berbilang Kemahiran serta Pengendali Mesin பலதிறன்கள் உள்ள துப்புரவாளர்கள், இயந்திரங்களை இயக்குபவர்கள்	≥ $1,648	≥ $1,698	≥ $1,749
Pekerja Pembersihan Tandas கழிவறைத் துப்புரவாளர்கள்	-	≥ $1,486	≥ $1,530
Pekerja Pembersihan Kawasan Luar / Pekerja Pembersihan Penjagaan Kesihatan வெளிப்புறத் துப்புரவாளர்கள் / சுகாதார பராமரிப்புத் துப்பரவாளர்கள்	≥ $1,442	≥ $1,486	≥ $1,530
Pekerja Pembersihan Am / Dalam Bangunan பொது / உட்பகுதித் துப்புரவாளர்கள்	≥ $1,236	≥ $1,274	≥ $1,312



TEMPAT-TEMPAT MAKAN
உணவு, பான நிறுவனங்கள்

Contoh: Kedai Kopi. Pusat Makanan, Pusat Penjaja
எ.கா. காப்பிக் கடைகள், உணவுக் கூடங்கள், உணவு அங்காடி நிலையங்கள்

Gaji-gaji yang tertera adalah Gaji Asas Bulanan அடிப்படை மாத சம்பளத்தைக் குறிப்பிடுகிறது	**1/7/2020 - 30/6/2021**	**1/7/2021 - 30/6/2022**	**1/7/2022 - 30/6/2023**
Penyelia மேற்பார்வையாளர்கள	≥ $1,854	≥ $1,910	≥ $1,967
Pekerja Pembersihan Berbilang Kemahiran serta Pengendali Mesin பலதிறன்கள் உள்ள துப்புரவாளர்கள், இயந்திரங்களை இயக்குபவர்கள்	≥ $1,648	≥ $1,698	≥ $1,749
Pekerja Pembersihan Tandas கழிவறைத் துப்புரவாளர்கள்	-	≥ $1,486	≥ $1,530
Pencuci Pinggan Mangkuk / Pemungut Sampah தட்டுகளைக் கழுவுபவர்கள் / குப்பை அகற்றுபவர்கள்	≥ $1,442	≥ $1,486	≥ $1,530
Pengemas Meja மேசைகளைத் துடைப்பவர்கள்	≥ $1,339	≥ $1,380	≥ $1,421
Pekerja Pembersihan Am பொது துப்புரவாளர்கள்	≥ $1,236	≥ $1,274	≥ $1,312



PENYENGGARAAN
பராமரிப்பு சேவை

Contoh: Pembersihan Awam, Majlis Bandaran
எ.கா. பொது இடத் துப்புரவு, நகர மன்றங்கள்

Gaji-gaji yang tertera adalah Gaji Asas Bulanan அடிப்படை மாத சம்பளத்தைக் குறிப்பிடுகிறது	**1/7/2020 - 30/6/2021**	**1/7/2021 - 30/6/2022**	**1/7/2022 - 30/6/2023**
Pemandu Trak (Kelas 4/5) கனரக வாகன ஓட்டுநர்கள் (வகுப்பு 4/5)	≥ $1,957	≥ $2,016	≥ $2,077
Penyelia / Pemandu Mekanikal மேற்பார்வையாளர்கள் / இயந்திர வாகன ஓட்டுநர்கள்	≥ $1,854	≥ $1,910	≥ $1,967
Pekerja Pembersihan Berbilang Kemahiran serta Pengendali Mesin / Pemungut Sampah பலதிறன்கள் பெற்ற துப்புரவாளர்கள், இயந்திரத்தை இயக்குபவர்கள் / குப்பை அகற்றுபவர்கள்	≥ $1,648	≥ $1,698	≥ $1,749
Pekerja Pembersihan Tandas கழிவறைத் துப்புரவாளர்கள்	-	≥ $1,486	≥ $1,530
Pekerja Pembersihan Am பொது துப்புரவாளர்கள்	≥ $1,442	≥ $1,486	≥ $1,530

SOALAN PENTING

Gaji PWM

S: Adakah saya langsung menerima kenaikan gaji setiap Julai?

J: Jika gaji anda sudah lebih daripada gaji asas PWM bagi peranan pekerjaan anda, kenaikan gaji terserah pada syarikat anda.

Bonus PWM

S: Bilakah saya akan menerima Bonus PWM saya?

J: Majikan anda harus membayar Bonus PWM sebulan dari tarikh pengakhiran pengiraan Bonus PWM yang ditentukan oleh syarikat, ataupun pada hari berkerja terakhir anda, mana yang lebih awal.

S: Adakah bonus prestasi saya dikira sebagai Bonus PWM?

J: Bonus PWM tidak ada kaitan dengan prestasi. Namun, bonus prestasi anda boleh dipertimbangkan sebagai Bonus PWM asalkan jumlahnya tidak kurang daripada jumlah Bonus PWM yang ditetapkan. Majikan anda boleh menimbang pelbagai bonus (contohnya, bonus akhir tahun, bonus waktu perayaan, dan seterusnya) sebagai Bonus PWM asalkan ia tertera dalam slip gaji dan dikira untuk sumbangan CPF.

பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள

PWM சம்பளம் பற்றி

கே: ஒவ்வொரு ஜூலை மாதமும் நான் இயல்பாகவே சம்பள உயர்வு பெறுவேனா?

ப: நீங்கள் செய்யும் வேலைக்கு PWM-ன் அடிப்படைச் சம்பளத்தைவிட உங்கள் சம்பளம் அதிகமாக இருந்தால், சம்பள உயர்வு கொடுப்பதா இல்லையா என்பது உங்கள் முதலாளியின் விருப்புரிமையைப் பொருத்திருக்கும்.

PWM போனஸ் பற்றி

கே: என் PWM போனசை எப்போது நான் பெறுவேன்?

ப: கம்பெனியால் நிர்ணயிக்கப்பட்ட PWM போனஸ் கணக்கிடப்படும் இறுதி நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அல்லது ஊழியரின் கடைசி வேலை நாளுக்குள், எது முன்னர் இடம்பெறுகிறதோ அப்போது, போனசை முதலாளிகள் உங்களுக்குக் கொடுக்கவேண்டும்.

கே: எனது செயல்பாட்டுத்திறன் போனஸ் PWM போனசாகக் கருதப்படுமா?

ப: உங்கள் செயல்பாட்டுத்திறனுடன் PWM போனஸ் தொடர்புபடுத்தப்படமாட்டாது. இருப்பினும், குறிப்பிடப்பட்ட PWM போனசுத் தொகைக்குக் குறைவாக இல்லாதவரை செயல்பாட்டுத்திறன் போனஸ் PWM போனசாகக் கருதப்படலாம். எந்த ஒரு போனசையும் (எ.கா. 13-வது மாத போனஸ், விழாக்கால போனஸ் போன்றவை) PWM போனசாக உங்கள் முதலாளி கருதலாம். ஆனால் அது உங்கள் சம்பளப் பட்டியலில் பிரதிபலிக்கப்படுவதுடன் மசேநி சந்தாத்தொகைக்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

S: Adakah cuti tanpa gaji juga termasuk dalam pengiraan Bonus PWM?

J: Tempoh pekerjaan 12 bulan termasuk cuti berbayar dan cuti berkanun. Cuti tanpa gaji / ketiadaan tanpa cuti / kehilangan tanpa makluman tidak termasuk dalam pengiraan Bonus PWM.

S: Adakah saya masih layak untuk Bonus PWM jika saya tidak memenuhi minimum 12-bulan tempoh pekerjaan kerana penukaran penyedia khidmat?

J: Jika pekerjaan anda ditamatkan kerana penukaran penyedia khidmat, iaitu perkara yang diluar kawalan anda, anda masih layak untuk Bonus PWM pro-rata walaupun anda belum memenuhi minimum 12-bulan tempoh pekerjaan.

Syarikat-syarikat dinasihatkan supaya berkomunikasi dengan para pekerja pembersihan mereka tentang kelayakan Bonus PWM dan jadual pembayaran dasar syarikat.



கே: PWM போனஸ் கணக்கெடுப்பில் சம்பளம் இல்லா விடுப்பும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா?

ப: 12 மாத வேலைக் காலம், சம்பளம் பெறும், மற்றும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் விடுப்புகள் சேர்ந்துக்கொள்ளப்படும். PWM போனசைக் கணக்கிடும்போது, சம்பளம் இல்லா விடுப்பு/ விடுப்பு இல்லாமலேயே வேலைக்கு வராதிருத்தல் / வேலைக்கு வராமலேயே காணாமல் போகுதல் ஆகியவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டா.

கே: சேவை வழங்குபவர் மாற்றம் காரணமாக எனக்கு ஆகக் குறைந்த 12 மாத சேவைக் காலம் என்னிடம் இல்லை என்றால், PWM போனசுக்கு நான் தகுதி பெறுவேனா?

ப: சேவை வழங்குபவர் மாற்றம் காரணமாக உங்கள் வேலையின் தொடர்பு அறுந்து போவது உங்களின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதால், உங்களுக்கு குறைந்த பட்ச 12 மாத வேலைக் காலம் உங்களிடம் இல்லாவிட்டாலும் விகிதாசார அடிப்படையில் PWM போனசைப் பெற நீங்கள் தகுதிபெற்றிருப்பீர்கள்.

PWM போனசுக்குத் தகுதி பெறுதல் மற்றும் அதைத் தவணையாகக் கொடுக்கும் கம்பெனிகளின் அட்டவணைக் கொள்கை பற்றித் தெளிவாக ஊழியர் சுற்றறிக்கை வழி தெரிவிக்குமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

S: Apakah bezanya antara seorang pekerja pembersihan sambilan dan seorang pekerja pembersihan kasual? Adakah mereka layak untuk Bonus PWM?

J: Pekerja pembersihan sambilan bermaksud pekerja yang bekerja dibawah kontrak perkhidmatan dan bekerja kurang daripada 35 jam seminggu secara tetap. Mereka layak untuk Bonus PWM pro-rata berdasarkan jumlah jam berkontrak dalam tahun yang tertentu, asalkan mereka memenuhi minimum 12-bulan tempoh pekerjaan pada tarikh pengiraan Bonus PWM syarikat mereka.

Pekerja pembersihan kasual bermaksud pekerja bantuan yang bekerja secara ad hoc. Mereka dianggap bekerja dibawah kontrak perkhidmatan selama kontrak mereka tidak



கே: பகுதி நேர துப்புரவாளருக்கும் அவ்வப்போது வேலை செய்யும் துப்புரவாளருக்கும் உள்ள வேறுபாடு என்ன? அவர்களும் PWM போனசுக்குத் தகுதி பெறுவார்களா?

ப: பகுதி நேர துப்புரவாளர்கள், சேவை ஒப்பந்தத்தின் கீழ் வழக்கமான அடிப்படையில் வாரத்தில் 35 மணி நேரத்திற்குக் குறைவாக வேலை செய்கிறார்கள். விகிதாசார அடிப்படையில் PWM போனசு பெற அவர்கள் தகுதி பெற்றிருப்பார்கள். குறிப்பிட்ட ஆண்டில் ஒப்பந்த மணி நேரத்தில் எவ்வளவு மணி நேரம் வேலை செய்திருக்கிறார்கள் என்ற அடிப்படையில் அது கொடுக்கப்படும். அதே வேளையில், PWM போனஸ் கணக்கிடப்படும் நாளுக்கு முன்னர் 12 மாத காலத்திற்கு வேலை செய்திருக்கும் தேவையையும் அவர்கள் நிறைவேற்றியிருக்கவேண்டும்.

அவ்வப்போது வேலைசெய்பவர்கள் என்பவர்கள் தற்காலிக அடிப்படையில் வேலையில் அமர்த்தப்படுபவர்கள். இத்தகையவர்களின் ஒப்பந்தம், முதலாளிகள் ரத்து செய்யும்வரை அவர்கள் சேவை ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்வதாகக் கருதப்படுவார்கள். துப்புரவாளர்களுக்கான முத்தரப்புத் தொகுப்புக் குழு, வேலை செய்வதற்கான குறைந்தபட்ச நேர அளவை தற்காலிகமாக வேலை செய்பவர்கள் நிறைவேற்றியிருந்தால், அவர்கள் செய்த வேலையை அங்கீகரிக்கும்பொருட்டு அவர்களுக்கு விகிதாசார PWM போனசைக் கொடுக்குமாறு கம்பெனிகளை ஊக்குவிக்கின்றது.



ditamatkan oleh majikan mereka. Kluster Tripartit bagi Pekerja Pembersihan mengalakkan syarikat-syarikat supaya membayar Bonus PWM pro-rata kepada para pekerja pembersihan kasual mereka untuk mengiktiraf sumbangan mereka, asalkan mereka memenuhi kriteria minimum tempoh pekerjaan.

Peranan Pekerjaan

S: Bagaimanakah peranan pekerjaan saya dianggap jika tanggungjawab pekerjaan saya termasuk lebih dari satu peranan pekerjaan (contohnya, pekerja pembersihan dalam bangunan dan pekerja pembersihan kawasan luar?)

J: Peranan pekerjaan anda adalah peranan yang anda melakukan untuk 50 peratus atau lebih di tempat kerja dan gaji PWM yang sepadan harus dibayar.

வேலையின் பங்கு பற்றி

கே: என்னுடைய வேலை பொறுப்புகள் ஒரு வேலைப் பிரிவுக்கும் மேலாக இருந்தால் (எ.கா. உட்புற மற்றும் வெளிப்புற துப்புரவாளர்) எந்த வேலைப் பிரிவைச் சேர்ந்தவராக நான் வகைப்படுத்தப்படுவேன்?

ப: உங்கள் வேலை நேரத்தில் 50% அல்லது அதற்கும் மேலாக செலவுசெய்யும் வேலைப் பிரிவில் இருந்தால் அப்பிரிவைச் சேர்ந்தவர் என்று வகைப்படுத்தப்படுவதுடன் அதற்கு இணையான PWM சம்பள அளவும் உங்களுக்குப் பொருந்தும்.